DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 242/ 2021
Deposition of PW3/ LW2

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜெயகுமார் |
| Father's / Husband Name | : | ராஜா |
| Village | : | சிங்கராஜபுரம் |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | ஓட்டுநர் |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.10.2025.
A1 to A7 எதிரிகள்ஆஜர்.

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது மனைவி. திருமணம் முடிந்து நானும் எனது மனைவியும் மாமனார் வீட்டில் இருந்தோம். எனது மாமனாரும் மாமியாரும் 2 வருடம் காலம் கழித்து இறந்த பிறகு எனது மைத்துனன் ஜெயபிரபு இறப்பு சடங்குக்கு வந்தார். வந்தவர் மாமனார் வீட்டில் நாங்கள் குடியிருக்க கூடாது என்று சொன்னார். நாங்கள் எங்களது பணம் 5 லட்சத்தை கொடுத்துவிட்டால் நாங்கள் வெளியேறி விடுவதாக சொன்னோம். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. நீங்களே இருந்து கொள்ளுங்கள் என்று சொல்லி சென்றுவிட்டார். அதன் பின்பு ஒரு வருடம் கழித்து 04.07.2021 தேதி மாலை 3.00 மணி அளவில் நான் வெளியில் சென்றிருந்தேன். எனது மனைவி மற்றும் 2 மகள்களும் வீட்டில் இருந்தார்கள். எனது மூத்த மகள் வானதி நிறை மாத கர்பாணியாக இருந்தர். பிரசவத்திற்காக வந்திருந்தார். எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நீங்கள் வீட்டில் இருக்க கூடாது என்று சொல்லி அடித்து வீட்டை வீட்டு வெளியேற்றி விட்டார்கள் உடனே எனது மனைவி போன் செய்து விபரங்கள் சொன்னார். நான் அவர்களை

அழைத்துக்கொண்டு மயிலாடும்பாறை காவல் நிலையம் சென்றேன். எனது மனைவிக்கு கன்னத்தில் காயம் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – என்னுடைய மனைவியை அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று நான் சொன்ன தேதி அன்று நான் வீட்டில் இல்லை. அதன் பிறகு 2 நாட்கள் கழித்து சண்டை நடந்தது அப்பொது நான் வீட்டில் இருந்தேன். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் நான் போலிசாரின் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே திருமணம் ஆகி விவாகரத்து பெற்றுவிட்டேன். அ .சா.1 என்னுடைய 2 வது மனைவி ஆவார். அ.சா.1 க்கும் அவருடைய முதல் கணவருக்கும் பிறந்த குழந்தையான வானதிக்கு உரிய வயதிற்கு முன்பே திருமணம் செய்து வைத்ததை 1ம் எதிரி ஏன் இவ்வாறு குறைந்த வயதில் திருமணம் செய்து வைக்கிறாய் என்று கேட்டதற்கு அவரை அடித்து நீங்கள் காயம் ஏற்படுத்தினீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீதும் அ.சா.1 மீதும் எனது மருமகன் ஜெயபெருமாள் மீதும் இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சொன்ன விபரங்களை தவிர வேறு ஏதும் எனக்கு தெரியாது என்றால் முதலில் நடந்த சண்டைக்கு பிறகு இரண்டாவதாக ஒரு சண்டை நடந்தது. நான் சாட்சியம் அளித்தது போல் 5 லட்சம் ஏதும் தர வேண்டியது இல்லை என்றால் தவறு.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.10.15 16:05:45 +0530

Judicial Magistrate,
Andipatti.